Taste formulae if a neighbour considers to musical !!! முவ்வேப்பாடு

சதுர்பொருள், நிலம், பெருப்பொருது, சிறுபொருது

அகவலெண்ணும் புறவு – முல்லைநிலம்

101 வள்ளியங்காடு – முல்லைநிலம்

பெருப்பெயல்பொழிந்து = கார்காலம் (பெருப்பொருது)

சிறுபுன்மாலை = சிறுபொருது

— நிப்பொருள்

உ 86.

நிப்பொருள் நெய்வம் விரிவு. line 3 மால் போல – விரிவு

— வை – வருது line 98. வரங்கெழுந் வரகிற்.
வள்ளி 101. வள்ளியங்காடு

அமைதுமான் புல்லவை 99. திருமுருகாற்றுப்படை.

மரம் சொன்னாறு தொகுது, கரிய

99. முருகன் சொன்னாறு

93 கொடுவேல் கரிய

பயிலி சான்றோர் சேர்ந்து வாழ் {மகாறை – யால் தொகுக்கிறார்}

பனை – சொல்லு.

நகை – பலர்க்கு மகிழ்ச்சி, கவலைகெடுதல்.

புகழ் = முல்லையாழ்

நு – முல்லை – line 9.

மிடா – line 25

கொடுவி = line 95

அவன்று = 96. கொடுவி = 95.

நீர் line 24. அருவியாது தூய கொடுது

உள் – line 23. பரந்து

சொல்லுக் கொள்கொள்வோர் – தூய்மைகள் ; ஆய்மகள் – line 13.

ஆயர் மகள் போல.

மாசனை யூனிவர்சிடியாரால் 1906-ம் ஆண்டு பி. ஏ. பட்டப் பரீக்ஷைக்குப் பாடமாக நியமிக்கப்பட்ட முல்லைப்பாட்டையும் [illegible]தை அறிந்துகொள்ளுதற்கு இன்றியமையாத மதுரை ஆசிரி[illegible]ச்சினார்க்கினிய ருரையையும், வெளிப்படுத்தத் தொடங்கி, [illegible]ணக்கர்களுக்கு அவை விளங்கும்வண்ணம் நூதனமாக எளிய [illegible]யில் எழுதிய குறிப்புக்களையும் உரியவிடங்களிற் சேர்த்[illegible]ப் பதிப்பிக்கலானேன்.

முல்லைப்பாட்டு [illegible] ஒருவரான [illegible]தனார் பாடியது; இஃது ஆசிரியப்பா, [illegible]-அடிகளையுடை[illegible]து; பகைமேற்சென்ற தலைவன் வருநாளவும் தலைவி பொறுத்[illegible]க்கொண்டிருந்தவிடத்து அவன் வந்ததனைக்கண்டு தோழிமுதலியோர்கள் தம்முட் கூறியதாக இயற்றப்பெற்றது.

இந்நூலில், தனித்திருக்கும் தலைவியின் இயல்பும் கார்காலத்தின் இயற்கையும் படைவீட்டிற் பகைவர் அடைந்த வருத்தமிருதியும் [illegible] மிகச்செவ்வையாகக் கூறப்பட்டுள்ளன.

இந்நூல், உரையாசிரியர் பலருரைகளில் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது; பல நூலாசிரியர்கள் இதிலுள்ளவாக்கியங்களைத் தாமியற்றும் நூல்களுள் ஆங்காங்கு அமைத்து அழகுபடுத்தியிருக்கின்றனர்; "முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவம்" என்பது விதியன்றோ.

இதிற் பண்டைக்காலச்செய்திகள் பல காணப்படும்.

இதிலுள்ள விஷயம் ஒவ்வொன்றும் யாவரும் எப்பொழுதும் அனுபவித்துக்கொண்டிருக்கும் அனுபவமாக உள்ளதாதலின், இந்நூல் படிப்பவர்களுக்கு மிக்க இன்பத்தை விளைவிக்குமென்பது கூறாமலே விளங்கும். செயற்கையழகினும் இயற்கையழகு சிறந்ததென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

விளங்க எழுதவேண்டியவைகளைப் பலகாரணங்களால் நான் எழுதாதிருத்தல் கூடும்; கல்வியறிவு ஒழுக்கங்களிற்சிறந்து கலாசாலைகளில் தமிழ்ப்பண்டிதர்களாக வீற்றிருக்கும் விவேகிகள் அக்குற்றத்தைப் பொறுத்து மாணாக்கர்களுக்கு உரிய விஷயங்களைத் தெரிவிப்பார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

வே. சாமிநாதையன்.

(1903)

நூல்.

இது, நக்கீரனார் முதலிய சங்கப்புலவர்களியற்றிய பத்துப் பாட்டினுள் ஐந்தாவது. பத்துப்பாட்டுக்கள் இன்னவையென்பதைப் பின்னுள்ள வெண்பாவாலுணர்க:—

நாக்கள் "முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

அவற்றுள்,— [illegible]

முதலானது திருப்பரங்குன்றம் உசஉ-அடிகளையுடையது; முருகக்கடவுண்மீது மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடியது; இதில் முருகக்கடவுளுடையஸ்தலங்களுட்சிறந்த திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி), திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை யென்னும் ஆறுபடைவீடுகளும், அவற்றில் அவர் எழுந்தருளியிருக்கும் விதமும் முறையே விரம்பப் பாராட்டிக் கூறப்படும். [illegible]

இரண்டாவது பொருநாற்றுப்படை உசஅ-அடிகளையுடையது; இளஞ்சேட்சென்னி புதல்வனாகிய நெடுமுடிக்கரிகாற்பெருவளவனை முடத்தாமக்கண்ணியார் பாடியது; இதில் கரிகாற்பெருவளவன் கொடையும் அவன் வீரமும் அவனுண்ட சோழநாட்டின் வளமும் காவிரிநதியின் சிறப்பும் நன்றாகக் கூறப்படும்.

மூன்றாவது சிறுபாணாற்றுப்படை உ௩௪ - அடிகளையுடையது; ஏறுமாநாட்டு நல்லியக்கோட னென்பவனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியது; இதில் நல்லியக்கோடனது வண்மையும் அவனுடைய நகரங்களாகிய எயிற்பட்டினம் வேலூர் ஆமூர் முதலியவற்றி னியல்பும், அவற்றிலிருந்த மாந்தர்களது நற்குண நற்செய்கைகளும் தமிழ்நாட்டு மூவேந்தர்களுடைய இராஜதானிகளாகிய மதுரை வஞ்சி உறையூ ரென்னு மூன்றுநகரங்களி னிலைமையும், பேகன் பாரிகார் ஆய் அதிகன் நள்ளி ஊர் யென்னும் வள்ளல்களெழுவரும் இன்னஇன்ன கொடையாற் பெயர் பெற்றார்க ளென்பதும் கூறப்பட்டுள்ளன.

நான்காவது பெரும்பாணாற்றுப்படை ௩00 - அடிகளையுடையது; காஞ்சி நகரத்திருந்த தொண்டைமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது; இதில் அவனது வண்மையும், தொண்டைநாட்டிலேயுள்ள குறிஞ்சிமுதலிய ஐந்திணைவளங்களும், அவற்றில்வாழும் மாந்தருடைய தொழில் ஊண் ஒப்புரவு முதலியனவும், காஞ்சி நகரத்தின் சிறப்பும், திருமாலின் நூற்றெட்டுத்திருப்பதிகளுள் ஒன்றாகிய திருவேங்கடமென்பதும் கூறப்பட்டுள்ளன.

ஐந்தாவது முல்லைப்பாட்டு. இதன் வரலாற்றை முகவுரையிற் காண்க.

ஆறாவது மதுரைக்காஞ்சி எஅஉ - அடிகளையுடையது; தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு [illegible] நிமித்தம் நிலையாமையைச் செவியறிவுறுத்தி மாங்குடிமருதனார் பாடியது; இதில் பாண்டி நாட்டின் ஐந்திணைவளங்களும், மதுரையம்பதியி னழகும், அப்பாண்டியனது வீரமுதலியனவும், சேரராஜனது நாளோலக்கச் சிறப்பும், அக்காலத்திருந்த பலசிற்றரசர்களுடைய பெருமையும், அருச்சுன னுக்குக் கண்ணன் உபதேசித்த பகவத்கீதையின் மேம்பாடும் இன்னும் [illegible] கூறப்பட்டுள்ளன.

ஏழாவது நெடுநல்வாடை தஅஅ - அடிகளையுடையது. பாண்டியன் நெடுஞ்செழியனை நக்கீரனார் பாடியது; இதில் [illegible] கொர்த்திகை மாதங் களாகிய கூதிர்க்காலத்தினியல்பும் தனித்திருந்த தலைவியது வருத்தமிகு தியும் படைவீட்டில் தலைவனிருக்கும் வண்ணமும் விளங்கக் கூறப்பட்டு [illegible]

எட்டாவது குறிஞ்சிப்பாட்டு உகக - அடிகளையுடையது; ஆரியவர சன் பிரகத்தனைத் தமிழறிவுறுத்தற்குக் கபிலர் பாடியது; இதில் மலை வளங்களும், இல்லறமுறைமையும், தலைவனும் தலைவியும் தம்முள்வைக் கத்தகு மன்புடைமையும், கற்பின் இன்றியமையாமையுமாகிய மலர்விசே டங்களும் அழகாகக் கூறப்பட்டுள்ளன; இது பெருங்குறிஞ்சி யென்றும் பெ யர் பெறும்.

ஒன்பதாவது பட்டினப்பாலை ௩௦௪ - அடிகளையுடையது; சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியது; இதிற் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பும், சோழநாட்டின்வளமும் காவிரி நதி பயன்படுதலும், அச்சோழனுடையபராக்கிரமமும், அவனுடைய செங் கோலின் மேன்மையும் நிரம்ப விரித்துக் கூறப்பட்டுள்ளன. இதனை [illegible] கேட்டு அச்சோழன் [illegible] ஆருருத்திரங்கண்ணனார்க்கு [illegible] பொன் பரிசளித்தான் [illegible] கலிங்கத்துப்பரணியாற் றெரிகின்றது.

பத்தாவது மலைபடுகடாம் ௩அ௩ - அடிகளையுடையது; மலைகுன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன்மேல் நன்னன் [illegible] முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியது; இதில் அவ னூர்க்குச்செல்லும் வழியினியல்பும், அவ்வவ்விடத்துக்கிடைக்கும் உண வின் வகைகளும் அவனது மலை சோலை காகெளின் வளங்களும், அவனது வள்ளன்மையும், ஆற்றலும், அவனது சுற்றத்தினொழுக்கங்களும், அவனது நாளோலக்கச் சிறப்பும், அவனது நவிர மென்னும் மலையில் காரியுண்டிக் கடவு ளென்னும் திருநாமத்தோடு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானது மகிமையும், அவனுடைய முன்னோர்களின் பெருமையும், அவனூரினியல் பும், அவனது சேயாறென்னும் ஆறுமுதலியவற்றின் வளங்களும் விளங் கக் கூறப்பட்டுள்ளன. இது கூத்தராற்றுப்படை யெனவும் பெயர்பெறும்

நூலாசிரியர்.

முல்லைப்பாட்டை இயற்றிய நப்பூதனரென்பவர் கடைச் சங்கப்புலவர்களுள் ஒருவர்; இவருடைய ஊர் காவிரிப்பூம்பட்டினம்; இவருடைய தந்தையார் பொன்வாணிகனார்; இதனால் இவரை வணிகரென்று நினைத்தற்கிடமுண்டு. 'ந' என்பது சிறப்புப்பொருளை யுணர்த்துவதோர் இடைச்சொல்; முதலில் இவர் 'பூதனார்' என்னும் பெயரையுடையவராகவிருந்து இந்நூலை இயற்றியகாரணம்பற்றிப் பின்பு நப்பூதனரென்று வழங்கப்பட்டாரென்று தெரிகிறது. நப்பாலத்தனார், நக்கீரனார், நச்செள்ளையார் என்னும் பெயர்களிலும் 'ந' என்பது இப்படி விரவியிருத்தல் காண்க. சிந்தாமணி, கோவிந்தையாரிலம்பகம், எசு-ம் செய்யுளுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'நப்பின்னை' என்பதைக்குறித்து எழுதியிருத்தலும் இதனை வலியுறுத்தும்; எட்டுத்தொகை முதலியவற்றில் இவரியற்றியதாக இதுவரையில் ஒன்றும் காணப்படவில்லை. ஆனால், பூதனரென்னும் பெயரினரொருவர், நற்றிணை, உகூ-வது செய்யுளியற்றியதாகத் தெரிகின்றது; அப்பெயரினரும் இவரும் ஒருவரோ வேறோ யாதும் தெரியவில்லை.

இந்நூல் உரையாசிரியராகிய
நச்சினார்க்கினியர்வரலாறு.

விருத்தம்.

எவனால் வாயிடைவந் தமுதவா யுடையனென, வியம்பப் பெற்றேன்,
எவன்பண்டைப் பனுவலப்பி விறவாது நிலவவுரை யெழுதியீந்தோன்
எவன்பரம வுபகாரி யெவனச்சி னார்க்கினிய னெனும்பே ராளன்
அவன்பாத விருபோது மெப்போது மலர்கவென தகத்து மன்னே.

இம்முல்லைப்பாட்டின்உரையாசிரியராகியநச்சினார்க்கினியர் பாண்டிநாட்டுள்ள மதுரைபுரியிற் பிராமணகுலத்திற் பாரத்துவாசகோத்திரத்தில் அவதரித்தவர். தமிழ்ப்பாவையிலுள்ள பலவகையான எல்லாநூல்களிலும் அதிபாண்டித்தியமுடையவர். இவரது சமயம் சைவமே. இவர் இன்னாராதல் "வண்டிமிர் சோலை மதுரா புரிதனி, லெண்டிசை விளங்க வந்த வாசான், பயின்ற கேள்விப் பாரத்துவாச, ஞான்மறை துணிந்தநற்

பொருளாகிய, தூயஞான நிறைந்த சிவச்சுடர், தானே யாகிய தன்மையாளன்'' என்னும் உரைச்சிறப்புப்பாயிரத்தால் விளங்கும். சிவதலங்களுட்சிறந்த சிதம்பரத்தினது திருநாமங்களாகிய 'திருச்சிற்றம்பலம்,' 'பெரும்பற்றப்புலியூர்' என்பவற்றை முறையே ஆறெழுத்தொருமொழிக்கும் எழெழுத்தொருமொழிக்கும் உதாரணமாக இவர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்து மொழிமரபில் ''ஒரெழுத்தொருமொழி'' என்னுஞ் சூத்திரத்து விசேடவுரையிற் காட்டியிருத்தலாலும், சைவசமயத்துச் சிறந்தநூல்களாகிய திருவாசகம் திருச்சிற்றம்பலக்கோவையார் என்பவற்றினின்றும் தமது உரைகளிற் பலவிடங்களில் இலக்கியவிலக்கணப் பொருள்களுக்கேயன்றித் தத்துவப்பொருளுக்கும் [illegible] எடுத்து ஆண்டுள்ளதனாலும், அங்ஙனம் மேற்கோள் [illegible] விசேடவுரைகளாலும், நாமகளிலம்பகத்து [illegible] மேலும் [illegible]' என்னும் ௩.௩.-ம் செய்யுளில் 'போகம்மீன்ற [illegible]' என்பதற்கு எழுதிய விசேடவுரையாலும், திருமுருகாற்றுப்படை யுரையிற்காட்டிய சில நயங்களாலும், மற்றுஞ் சிலவற்றாலும், நச்சினார்க்கினியரது சைவ சமயாபிமானம் நன்குவெளியாம்.

நச்சினார்க்கினியர், இந்நூலுக்கன்றிப் பத்துப்பாட்டினுள் மற்றநூல்களுக்கும் தொல்காப்பியத்திற்கும் கலித்தொகைக்கும் குறுந்தொகையில் பேராசிரியர் பொருளெழுதாதொழிந்த இருபது செய்யுட்களுக்கும் உரை செய்தருளினர். இன்னுஞ் சிலநூல்களுக்கு இவர் உரையியற்றினரென்பர்; அவை இவையென்று புலப்படவில்லை. இக்காலத்து வழங்கும் திருக்கோவையாருரை பேராசிரியராற் செய்யப்பட்டதென்று தெரிகின்றமையாலும், இவர் அந்நூற்குச்செய்த வேறுரை கிடையாமையாலும் அதற்கும் திருக்குறள் முதலிய மற்றுஞ்சிலவற்றிற்கும் இவர் உரைசெய்திருப்பதாக இவருடைய உரைச் சிறப்புப்பாயிரத்திலேனும் வேறொன்றிலேனும் கூறப்படாமையாலும், அவைகள் இங்கே எழுதப்பட்டில

[illegible] நச்சினார்க்கினியர் முதன்முறை ஒருரையெழுதி, அக்காலத்துப் பிரசித்திபெற்றிருந்த சைனவித்துவான்கள் சிலருக்குக்காட்ட, அவர்கள் அவ்வுரையை அங்கீகரியாமை கண்டு, பின்பு [illegible] நூல்கள் பலவற்றையும் நன்றாக ஆராய்ந்து இரண்டாமுறை இவ்வுரையை யெழுதி அவர்களுக்குக் காட்டவே, அவர்கள் உற்றுநோக்கி வியந்து இவ்வுரையை அங்கீகரித்துக்கொண்டார்களென்று சைனர் கூறுகின்றனர். [illegible]

நாமகளிலம்பகத்தில் "கண்ணுளார் நுங்காதலர்" என்னும் ௩.௩.-ம் செய்யுளுரையில் 'ஈங்குத் தன்மையையுணர்த்துதல் "செலவினும் வரவினும்" என்னுஞ் சூத்திரத்திற் கூறினும்' என்றும், குணமாலையாரிலம்பகத்தில் "மங்கை நல்லவர்" என்னுஞ்செய்யுளுரையில் 'ஆசிரியர் "நண்டெந்தும்பியும்" என்று தும்பியைப்பின்வைத்தது, மேல்வருஞ் சூத்திரத்தில்

"மாவு மாக்களு மையறி வென்ப" என்ற ஐயறிவு இதற்கும் ஏறுதற் கென்றுணர்க; இச்சீன வாராததனால் வந்ததுமுடித்த லென்னுந் தந்திரவுத்தியாற் கொள்க வென்று ஆண்டு உரை கூறிப்போந்தாம்' என்றும் நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலால், இவர் தொல்காப்பியத்திற்கு உரையெழுதின பின்பு சீவகசிந்தாமணிக்கு உரையெழுதின ரென்று விளங்குகின்றது.

தொல்காப்பியவுரைமுதலியவற்றில் இவரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ள மேற்கோள்களமைந்த நூல்களுள் இதுகாறும் விளங்கியவை வருமாறு:—

க. அகத்தியம் ([illegible])	௩௧. திரிகடுகம்
உ. அகநானூறு ([illegible])	௩௨. திருக்குறள்
௩. அணிநியமம் ([illegible])	௩௩. திருக்கோவையார்
௪. அவிநயம் ([illegible])	௩௪. திருமுருகாற்றுப்படை
௫. ஆசாரக்கோவை	௩௫. திருவாசகம்
௬. இறையனாரகப்பொருள்	௩௬. தொல்காப்பியம்
௭. எழிலிக்கோவை	௩௭. நற்றிணைநானூறு
௮. ஏலாதி	௩௮. நாடகநூல்
௯. ஐங்குறுநூறு	௩௯. நாலடியார்
௧௦. ஐந்திணையெழுபது	௪௦. நெடுநல்வாடை
௧௧. ஐந்திணையைம்பது	௪௧. பட்டினப்பாலை
௧௨. கடகண்டு	௪௨. பதிற்றுப்பத்து
௧௩. கலித்தொகை	௪௩. பரிபாடல்
௧௪. களவழிநாற்பது	௪௪. பல்சந்தப்பியம்
௧௫. காக்கைபாடினியம்	௪௫. பல்காயம்
௧௬. குண்டலநாற்பது	௪௬. பழமொழி
௧௭. குறிஞ்சிப்பாட்டு	௪௭. பன்னிருபடலம்
௧௮. குறுந்தொகை	௪௮. பாரதவெண்பா
௧௯. கூத்தநூல்	௪௯. புறநானூறு ([illegible])
௨௦. கைந்நிலை	௫௦. புறப்பொருள்வெண்பாமாலை
௨௧. கொன்றைவேந்தன்	௫௧. பூதபுராணம்
௨௨. சிலப்பதிகாரம்	௫௨. பெருங்கதை
௨௩. சிறுகாக்கைபாடினியம்	௫௩. பெரும்பாணாற்றுப்படை
௨௪. சிறுபஞ்சமூலம்	௫௪. பெரும்பொருள்விளக்கம்
௨௫. சிறுபஞ்சமூலம்	௫௫. [illegible]
௨௬. சினேந்திரமாலை	[illegible] செய்த அந்தாதி
௨௭. சீவகசிந்தாமணி	௫௬. பொருநராற்றுப்படை
௨௮. தகரேயாத்திரை	௫௭. மணிமேகலை
௨௯. திணைமாலைநூற்றைம்பது	௫௮. மதுரைக்காஞ்சி
௩௦. திணைமொழியைம்பது	௫௯. மலைபடுகடாம்

௧௦. மாபுராணம்	௧௫. யாழ்நூல்
௧௧. முத்தொள்ளாயிரம்	௧௬. வலைக்கடம்
௧௨. முதுமொழிக்காஞ்சி	௧௭. வஞ்சிப்பா
௧௩. முல்லைப்பாட்டு	௧௮. வளையாபதி
௧௪. மோதிரப்பாட்டு	௧௯. விளக்கத்தார்கூத்து.

இன்னும் விளங்காத நூல்கள் பல.

தொல்காப்பியவுரைமுதலியவற்றில் வேதம், வேதாங்கம் முதலிய பல நூல்களிலிருந்தும் பல உரைகளிலிருந்தும் பற்பல அரியவிஷயங்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி நன்குவிளக்கிப்போகின்றமையின், இவரை வடமொழியிலும் மிக்க பயிற்சியுள்ளவராகச் கொள்ளுதற் கிடமுண்டு. [illegible] உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர், இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள் இவருடைய உரையில் எடுத்துக்கூறப் பட்டிருத்தலின், அவர்களுக்கு இவர் காலத்திற்பிறபட்டவரென்று தெரிகின்றது.

அமிழ்தினுமினிய தமிழ்மடவரல் செய் அருந்தவத்தின் பெரும்பயனாக அவதரித்தருளிய இமமகோபகாரியின் அருமைபெருமைகள் விரிவஞ்சி விடுக்கப்பட்டன.

இவருடைய மேம்பாட்டைப் பாராட்டி அக்காலத்து ஆன்றோராற் செய்யப்பட்ட உரைச் சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் வருமாறு.—

வெண்பா.

பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியு
மாரக் குறுந்தொகையு ளைஞ்ஞான்குஞ்— சாரத்
திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்
விருத்திநச்சி னார்க்கினிய மே.

தொல்காப் பியத்திற் றொகுத்த பொருளனைத்து
மெல்லார்க்கு மெய்ப்ப விளிதுரைத்தான்—சொல்லார்
மதுரைநச்சி னார்க்கினியன் மாமறையோன் கல்விக்
கதிரின் சுடரெறிப்பக்கண்டு.

ஆசிரியப்பா.

பாற்கடல் போலப் பரந்த நன்னெறி
நாற்படு வான்பொரு ளுன்னிதி னுணர்ந்த
போக்கறு கேள்விப் புலவோர் புலத்தி
னூற்பொருள் பொதிந்த நுட்கமை யாப்பினைத்
தேக்கிய சிந்தைய னாகிப் பாற்பட
வெழுத்துஞ் சொல்லும் பொருளுமிம் மூன்று
மிழுக்கற வாய்ந்த வழுக்கிலொல் சீர்த்திச்

சிவஞானசுவாமியார் வரலாறு

தொல்காப் பியமெனுந் தொகுகடற் பரப்பை
மறுவுங் குறைவு மின்றி யென்றுங்
கலையி னிறைந்த கதிர்மதி யென்னா
நிலையுடை கலத்தி னெடுங்கரை காணுங்
கல்லா மாந்தர் கற்பது வேண்டியு
ந்நல்லறி வுடையோர் நயப்பது வேண்டியு
முரையிடை யிட்ட காண்டிகை யுரைத்து
மான்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து
சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரிய
லொருபுது பாட்டு முணர்பவர்க் கெல்லா
முரையிற் முழுதும் புரைபட வுரைத்து
மொலித்திரைத் தலத்தி னுணர்ந்தோ ருரைக்குங்
கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற் கண்டதற்
குள்ளுறை யுவமமு மேனை யுவமமுந்
தெள்ளிதிற் றெரிந்து திணைப்பொருட் கேற்ப
வுள்ளுறை யுவமத் தொளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந் துணர்த்தி
யிறைச்சிப் பொருளுக் கெய்தும் வகையைத்
திறப்படத் தெரிந்து சீர்பெறக் கொளீஇத்
துறைப்படு பொருளொடு சொற்பொருள் விளக்கி
முறைப்பட வினையை முடித்துக் காட்டிப்
பாட்டிடை மெய்ப்புரடு பாங்குறத் தெரித்துப்
பாற்பட நூலின் யாப்புற வுரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்
போற்ற வின்னுரை பொருள்பெற விளம்பியும்
வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை போதிந்த செந்தமிழ்ச்
சித்தா மணியைத் தெண்கடன் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு வந்திப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருந்தது முனிவன் கருத்தினு வேள்ளப்
பருப்பொருள் கடிந்து பொருட்டொடர்ப் பட்டுந்து
வினையொடு முடியப் பிணையுரை யுரைத்து
நல்லறி வுடைய தொல்பேராசான்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
றிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
விதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்துக்

தண்டமிழ் தெரித்த வண்புகழ் மறைவே
வண்டிமிர் சோலை மதுரா புரிதனி
லெண்டிசை விளங்க வந்த வாசான்
பயின்ற கேள்விப் பாரத் துவாச
[illegible]ன்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தாய ஞான நிறைந்த சிவச்சுடர்
தானே யாகிய தன்மை யாள
[illegible]ன்விறை வாய்மை [illegible]
[illegible]யு மருவியம் பொதியின்
மருவிய [illegible]முனி தெரிதமிழ் [illegible]
[illegible]யுழி காலம்
வாழி வாழியிம் மண்மிசை தானே.

திருத்தம்.

பச்சைமர் [illegible]ய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
வெச்சினற் றிசையு முண்ணு மமிழ்தென வெழுநா வெச்சின்
[illegible] ஞாநம் விண்ணோர் மிசைகுவர் வேத போத
[illegible]ச்சினார்க் கினிய னெச்சி னறுந்தமிழ் [illegible]கர்வர் நல்[illegible]

[illegible]

[illegible]

முல்லைப்பாட்டு.

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
விலங்கு பொறித்த மாநாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
5 கோடுகொண் டெழுந்த கொடுஞ்சிலை வேழம்
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
யருங்கடி முதூர் மருங்கிற் போகி
10 யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவி முல்லை
யரும்பவி ழலரி தூஉய்க்கை தொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி
ஞாங்கர் மலைமறை யாக்கி யாங்கண்
20 வருத லாயர் பருவர லெல்லாந்
தீர்மா யோவெனத் தீர்மா யோவெனக்
கானயா றகழி யிடைவகுத்தெனப்
உரு சேணாறு படுமென்றாயத் தெல்லைக்
வேட்டுப்பி [illegible] யாடிக் காட
விடுமுட் புரிசை யெழுமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி
கவலை முற்றங் காவ லின்ற

தேம்[illegible]கவுள், சிறுகண் யானை
யோங்குநிலைக், கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை யின்குளி குண்ணது, நுதறுடைத்
தயிலுளை, மருப்பிற்றங் கையிடைக், கொண்டெனத்
கடுங் கவ்வுமட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா விளைஞர் கவளங் கைப்பக்
கற்றோய்த் துடுத்த படிவப் பாரப்பான்
முக்கோ லுலக்கைநிலை, கடுப்ப, நற்போர்
ரோடா வல்லிற், றூணி நாற்றிக்
சுடுங் குத்திக், கயிறுவாங் கிருக்கைப்,
பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவில், லரண, மரண மீக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க், கண்டங் கோலி யக்கோப்பு
குறுந்தொடி முன்கைக், கூந்தலஞ் சிறுபுறத்
திரவுபகற், செய்யுந் திணிபிடி யொள்வாள்,
விரவுவரிக் கச்சிற், பூண்ட மங்கையர்,
நெறிபுமிழ் சுரையர், நெடுந்திரிக் கொளீஇப் பாந்தம்
கையமை விளக்க நந்துதொறு மாட்ட
நெடுநீர் வெரணமணி, * நிழற்றிய நடுநாள்
இதாவா லசைவளிக் கசைவந் தாங்குத்,
தகுனிமுடித்துப், பொர்த்த, தூங்க லேங்குநடைப்,
பெருமூ தாள ரேமஞ் சூழப்,
பொழுதளந் தறியும் பொய்யா மாக்க
டொழுதுகாண் கையறு தோன்ற வாழ்த்தி
யெறிநீர் வையகம் வெள்ளிய செல்வோய்நின்
குறுநீர்க் கன்னி லினைத்தென் றிசைப்ப
மத்திகை விளைய மறிந்துவிங்கு செறிபிடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வினைகண் யவனர்
புலித்தொடர், விடுபுனைமா னல்லிற்
றிருமணி விளக்கங் காட்டித், திண்ஞா

* மிழற்றிய வென்றும் பாடம்.

[illegible] வாகிய, வீரரைப் பள்ளி
[illegible] ளுடம்பி னுரைத்குவிராபா நாவிற்
படம்புகு * மிலைச்சு முறையு ராகியு
மண்டமர் நசையொடு கண்படை பெறாஅ
தெடுத்தெறி யெஃகமு பாய்கலிற் புண்கூர்ந்து
[illegible] மறக்க வேழம் வேழத்துப்
[illegible]பதைப் பனை பருவத்தை துமியத் [illegible]
தேம்பாய் கண்ணி நல்லிலா திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோ ருள்ளியுந் தோறுமிப்
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்
துண்ணு துயங்கு மாசிந தித்து
மொருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு தடக்கை சோத்தி நெடுந்தினைநது
பகைவர்ச கூடியிப் படைகொ ணேன்விர
னகைதாழ் கண்ணி நல்லலந் திருத்தி யாகை
யரசிருந்து பனிக்கு முரிச்முழங்கு பாசறை
யின்றுயில் வதிபுநற் காணு டியருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந் தேற்றியு மோடுவலோ திருததியு
மையல் கொண்டு மொய்யென வுயிர்த்து
மேவுறு மஞ்ஞையி னடுங்கி யினிழநெகிழ்நது
பாலை விளக்கிற் பருஉச்சுட ரழலவிட்
விடஞ்சிறந் துயரிய வெழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
யின்ப லிமிழிசை யோர்பபனள் கிடந்தோ
ளஞ்செவி நிறைய வினிய வென்றுபிற
வேண்டுபுலங் கவர்ந்தவீண்டுபெருந் தானையொடு
[illegible] வெல்கொடி யுயர்ந் வலனேந்பு
வயிநும் வலையு மார்ப்பவு மயிர
செறியிலைக் [illegible] மலர்
முறியிணர்க் கொன்றை நன்பொன் னாலக்
கோட்டம் குவிமுகை யங்கை யவிழத்

* மிலைச்சரென்றும் பாடம்.

தோடுதிர் தோன்ற குருதி பூப்ப
கான நந்திய செந்நிலப் பெருவழி
வீன்மீ வாய்த்த வாங்குகதிர் வரிநிழ
றிரிமருப் பிரலையொடு மடமா னுகள,
வெதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்,
முதிர்கரு வளளியங் காடுபிறக் கொழியத்,
தீண்பரி துரக்குஞ் செலவினர்
வினைவளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே வலனே.

இதன்பொருள்.

இப்பாட்டிற்கு முல்லையென்று பெயர்கூறினர்; முல்லைசான்ற கற்புப் பொருந்தியதனால். இல்லறநிகழ்த்துதற்குப் பிரிந்து வருந்துணையும் ஆற்றியிருவென்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து, இல்லறநிகழ்த்திய இயற்கை முல்லையாமென்றுகருதி இருத்தலென்னும்பொருட்ட முல்லையென்று இச்செய்யுட்கு நப்பூதனார் பெயர்கூறினமையிற் கணவன் வருந்துணையும் ஆற்றியிருந்தாளாகப் பொருள்கூறலே அவர்கருத்தாயிற்று. * "தானேசேறல்" என்னும்விதியால், அரசன் தானே சென்றது இப்பாட்டு.

(குறிப்பு) முல்லைசான்றகற்பு - இருத்தல் அமைந்தகற்பு; முல்லை- இருத்தல். இனி முல்லைமலரைச் சூடுதற்கமைந்த கற்பெனினும் பொருந்தும்; கற்புடைய மங்கையர் முல்லைமலரைச் சூடிக்கொள்ளுதல் மரபு. இதுகாரணம்பற்றியே முல்லைக்கொடி கற்பென்று பெயர்பெறும். வருந்துணையும் - வருமளவும். ஆற்றியிரு - பொறுத்திரு. 'தானே சேறலுந் தன்னொடு சிவணிய, வேனோர் சேறலும் வேந்தன் மேற்றே' என்பதன்பொருள்: தன்பகையை வெல்லுதற்குத் தானே செல்லுதலும் அவனோடு நட்புக்கொண்ட மற்றையோர் அவனுக்குத் துணையாகிச் செல்லுதலும் ஆகியஇரு பகுதியும் அரசன் கண்ணவாம். எ- று. என்றது, பகைவரை அடக்குதற்கு அரசன் றானே செல்லுதலும் அவனோடு நட்புக்கொண்ட பிறர் செல்லுதலும் விதியாமென்றவாறு.

இது, தலைவன் வினைவயிற்பிரியக்கருதியதனை அவன்குறிப்பானுணர்ந்து ஆற்றுளாய் தலைவியதுநிலைமைகண்டு அவன் வற்புறுப்பவும் உடம்படாதவளைப் பெருமுதுபெண்டிர் அவன் வினைமுடித்துவருதல் வாய்துது, நீவருத்தநீங்குவதெனக்கூற, அதுகேட்டு அவள் நீடுநினைந்து ஆற்றியிருந்த வழித் தலைவன் அக்காலத்தே வந்ததனைக்கண்டு வாயில்கள் தம்முட்கூறி

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், உ

[illegible]

யது.இது, * "வாயி லுசாவே தம்முளு முரிய" † "எல்லா வாயிலு மிருவர் தேஎத்தும்-புல்லிய மகிழ்ச்சிப் பொருள வென்ப" என்பனவற்றாற்கூறினார்

(கு - பு) வினைவயின் - போர்க்கண். ஆற்றாள் ஆய - பொறுதலைஉடைய. பெருமுது பெண்டிர் - மிகமுதிர்ந்த மகளிர். வாய்வது - உண்மை. நீங்குவது - நீங்கவேண்டுவது. பெண்டிர் கூற்றென்க. நீடுநினைந்து - இவ்வாறு தலைவர் பிரிந்தாலல்லாமல் அரசியல் நடவாதென்று நினைத்து. வாயில்கள் - தூதிற்குரியவர்கள். 'வாயிலுசாவே' என்பதற்குப்பொருள்: ஒருவர் மற்றொருவர்க்கு உரைப்பதுபோலத் தங்களுட் சொல்லுதலும் அமையுமென்பது. 'எல்லாவாயிலும்' என்பதன்பொருள்: தூதிற்குரிய எல்லோரும் தலைவனிடத்தும் தலைவியிடத்தும் பொருந்திய மனமகிழ்ச்சிப் பொருளை நிகழ்த்துதலைத் தமக்குப் பொருளாகவுடையர். எ - று.

1. நனந் தலை உலகம் வளைஇ—அகலத்தை இடத்தேயுடைய உல[illegible]

(கு - பு) 'நன' என்பது அகரவீற்று உரிச்சொல்; அகலம் என்னுங் குறிப்புப் பொருளையுணர்த்தும்.

1, 2. [நேமியொடு, வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை:]

1. நேமியொடு வலம்புரி தாங்கு தடக்கை மால் (ரு)—சக்கரத்தோடே வலம்புரியைத்தாங்கும் பெரியகைகளையுடையமால்,

(கு - பு) வலம்புரி - ஒருவகைச்சங்கு; வலமாகவளைந்துள்ளதென்பது பொருள்.

2. மா பொறித்த மால் (ரு)—திருமார்பிடத்தே திருமகளைவைத்த மால்.

(கு - பு) பொறித்த - வைத்த; இதனை "வடபுலவிமயத்து வாங்குவிற் பொறித்த" என்னும் சிறப்பாணாற்றுப்படையுரையானுமுணர்க.

3. நீர் செல நிமிர்ந்த மாஅல் போல—மாவலிவார்த்த நீர் தன்கையிலே சென்றதாக உயர்ந்த திருமாலைப்போல,

இனி, நேமியோடே வலம்புரியையுமுடைய உத்தம விலக்கணங்களைப் பெற்றிருக்கின்ற திருமகளையணைத்தகையிலே நீர் செல்லவென்றுமாம்

இதனாலே முல்லைக்குரிய தெய்வங்கூறினார்.

(கு - பு) மாவலி - ஓரசுரன்; இவனிடம் திருமால் குறுகியவடிவத்துடன்சென்று மூன்றடிமண்கேட்டு உடன்பட்ட அவன் தாரைநீர்வார்த்தவுடனே பெரியவடிவங்கொண்டு பூமியையும் ஆகாயத்தையும் அளந்தாரென்பது புராணகதை. நேமி - சக்கரம்; ஈண்டுச் சுதர்சனரேகை; வலம்புரி - சங்கரேகை; இவை சிறந்த ஆடவர் மகளிர்களுடைய கையிலுள்ள உத்தம இலக்கணங்கள்; பெற்றிருக்கின்ற கையென இயைத்தலும் பொருந்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், உ௦௧.
தற்பியல், ௩௭.

தும்; "வலம்புரி பொறித்த வணகை மதவல" எனறார்; (ஸாதா.நாம. கஎரு) திருமால் முல்லைத்திணைக்குரியதெய்வம்; 'மாயோன்மேய காடுறையுலகம்' என்பர்; (தொல். பொரு. ரு.)

4, 5. [பாடிழிழ் பனிக்கடல் பருகிவல னேர்பு, கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி:]
பாடு இமிழ் பனிக் கடல் பருகி வலன் ஏர்பு கோடு கொண்டு—ஒலிமுழங்குகின்ற குளிர்ச்சியையுடைய கடலைக்குடித்து வலமாகவெழுந்து மலைகளை இருப்பிடமாகக்கொண்டு,

5. உலகம் வளைஇ (க) எழுந்த கொடுஞ்செலவு எழிலி—பெய்யுங் காலத்தே [illegible]த்தைவளைத்தெழுந்த கடியசெலவினையுடைய மேகம்,

மால் நீர் செல நிமிர்ந்தாற்போல மேகமும் நீர்செலநிமிர்ந்ததென்றார். இனி உலகளந்த திருவடிகளிலே அணைத்துக்கொண்[illegible]ந்த மாலென்று முரைப்பர்.

6. பெரும்பெயல் பொழிந்த சிறு புன் மாலை—பொரி[illegible]மழையைப் பெய்த சிறுபொழுதாகிய வருத்தஞ்செய்கின்ற மாலைக்காலத்துப் பாவைவிளக்கு (அரு) எனக்கூட்டுக.

இதனானே முல்லைக்குரிய * காரும் மாலையுங் கூறினார்.

மால்போலெழுந்த எழிலிபொழிந்த மாலையென்க.

(கு - பு) 'பெரும்பெயல் பொழிந்த' என்றதனாற் கார்காலம் கூறப்பட்டது. கார்காலமும் மாலைக்காலமும் முறையே முல்லைத்திணைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதுமாம்.

7. [அருங்கடி மூதூர் மருங்கிற் போகி:] அருங்கடி மூதூர் மருங்கில் நல்லோர் (கஅ) போகி—அரியகாவலையுடையபழைய ஊர்ப்பக்கத்துப் பாக்கத்தே படைத்தலைவரேவலால் நற்சொற்கோடற்குரியோர்போய்,

(கு - பு) பாக்கம் - பக்கத்துள்ள ஊர். நற்சொற்கோடல் - நல்லநிமித்தமான வார்த்தையைக்கேட்டல்.

8, 11. [யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு, நாழி கொண்ட நறுவீ முல்லை, யரும்பவி ழலரி தூஉய்க்கை தொழுது, † பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப.]

8, 10. நறு வீ முல்லை அரும்பு யாழ் இசை இனவண்டு ஆர்ப்ப அவிழ் அலரி நாழி கொண்டநெல்லொடு தூஉய்—நறியபூக்களையுடை

ய முல்லையினது அரும்புகள் யாழினது ஓசையினையுடைய இன

* "காரு மாலையு முல்லை குறிஞ்சி - கூதிர் யாம மென்மனார் புலவர்." என்பது தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், சு.

† பெருமுதுபெண்டிரென்பதற்கு ஒருபிரதியிலும் உரையிலது; பெரிய முதிர்ந்த பெண்டிரென்க.

மானவண்டுகள் ஆரவாரிக்கும்படி அவிழ்ந்தபூவை நாழியிடத்தே கொண்டுபோனதெல்லுடனே தூவி,

10, 11. கை தொழுது விரிச்சி நிற்ப—தெய்வத்தை வணங்கி நற்சொற் கேட்டு நிற்க,

நல்லோர் (கஅ) போகித் (எ) தூஉய்த் தொழுது நிற்பவென்க.

என்றது:—ஒருவேந்தன் ஒருவேந்தனோடு இகல்கருதினாற் போர்செய்யவேண்டுதலின், அவனுட்டந்தணர்முதலியோரைத்தன்னுட்டின்கண்ணே அழைத்தற்கும், அதனையறியாத ஆவைக் கொண்டுபோந்து தான் காத்தற்கு மாகத் தன்படைத்தலைவரைநோக்கி அரசன் நிரையடித்தற்குஏவியவழி, அவர் அவனூரினின்றும்போய் ஒருபாக்கத்துவிடியிருந்து அரசனுக்கு மேல் வரும் ஆக்கத்தையறிதற்கு விரிச்சிபோக்கல் வேண்டுமென்று புறத்திணையியலுட் கூறினமையான், ஈண்டும் அவ்வாறேகூறினார். அது, * "வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவி - னாதந் தோம்பன் மேவற் றாகும்." † "படையியங்கரவம் பாக்கத்து விரிச்சி" என்னுஞ் சூத்திரங்களானும், "திரைத்துவள் வெள்வாய்த் திரிந்துவீழ் தாடி - நரைமுதியோ னின்றுரைத்த நற்சொ-னிரையன்றி - யெல்லைநீர் வையமிறையோற் களிக்குமால் - வல்லையே சென்மின் வழி" என்னும் உதாரணத்தானுமுணர்க. இவர் இதுகேட்டு நிரைகொண்டால் அரசன் வஞ்சிசூடி மண்ணசையால் மேற் செல்வனென்பது. ஆண்டு ‡ "எஞ்சா மண்ணசைஇ" என்னுஞ்சூத்திரத்திற் கூறியவாறே ஈண்டுக்கூறினார். அது மேல் "முனைகவர்ந்து" (கக) என்பதனானுணர்க. * 9:9:'10.

(கு - பு) நாழி - அளத்தற்கருவிகளுள் ஒன்று. இகல் - பகை. அவனுடு - பகைவன்றேயம். அதனை - அப்போரை. நிரையடித்தற்கு - பசுக்கூட்டங்களை ஓட்டிக்கொண்டுவருதற்கு. ஆக்கம் - விருத்தி. "வேந்துவிடு முனைஞர்" என்பதன்பொருள்:—அரசனால் விடப்பட்டு முனைப்புலங்காத்திருந்த சேனைத்தலைவர், பகைநிலத்தேசென்று களவினாலே பசுக்கூட்டத்தைக்கொண்டுபோந்து பாதுகாத்தலைப் பொருந்துதலுடையதாகும் வெட்சித்திணையென்பது. "படையியங்கரவம்" என்பதன்பொருள். நிரைகொள்ளுதற்கு எழுந்த சேனை படைவீட்டின் புறத்தேசெல்லுதலாலுண்டாகும் ஓசையும், அங்ஙனம் எழுந்த சேனைவீரர்போய் இரவில் நற்சொற்கேட்டலும். 'திரைகவுள்' என்னும் செய்யுட்குப்பொருள்: திரை கவுள் - சுருண்டகன்னத்தையும்,வெள் வாய்-வெள்ளியவாயினையும், திரிந்துவீழ்தாடி-முறுக்குண்டு வீழ்ந்த தாடியினையும்,நரை-நரையையுமுடைய,முதியோன், நின்று உரைத்த நற்சொல்-நின்றுசொல்லிய நன்னிமித்தச்சொல்லான.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், உ.

† " " " கூ.

‡ " " " எ.

நிரை அன்றி-பசுக்கூட்டத்தை அளித்துவிடுவதல்லாமல், நீர் எல்லை வையம்- கடலை எல்லையாகவுடைய பூமியையும், இறையோற்கு அளிக்கும்-அரசனுக்குக் கொடாநிற்கும், ஆதலால், வல்லை நீர் வழி சென்மின் - விரைவாக நீர் வழியிற் செல்லுவீராக. எ - று. வஞ்சிமாலையைச் சூடுதல் பகைமேற் செல்வோர் தொழில். "எஞ்சா மண்ணசை இ" என்னும் சூத்திரம்: "எஞ்சா மண்ணசை இ வேந்தனை வேந்தன், அஞ்சுதகச் சென்றடல்குறித் தன்றே." இ - ள். எஞ்சா மண் நசை இ - குறையாத பூமியைவிரும்பி, அதனால், அஞ்சுதகத் தலைச்சென்று - அங்கே வாழ்வோர்களுக்கு அஞ்சுதலுண்டாகும்படி அந்நாட்டிடத்தேசென்று, வேந்தனை வேந்தன் - ஒருவேந்தனை மற்றொருவேந்தன், அடல் குறித்தன்று - அடுதலைக்கருதியது வஞ்சித்திணை. எ - று.

12, 13. [சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி, னுறுதுய ரலமர னோக்கி
யாய்மக, ணடுங்குசுவ லசைத்த கையள் கைய, கொடுங்கோற்
கோவலர்பின்னின்றுய்த்தா, வின்னே வருகுவர் தாயரென்போ,
ணன்னர் நன்மொழி கேட்டன மதனு, னல்ல நல்லோர் வாய்ப்
புள்:]

17, 18. நன்னர் வாய்ப்புள்—அவர்கேட்ட நன்றாகிய நற்சொல்,

13, 14. ஆய்மகள் நடுங்கு சுவல் அசைத்த கையள்—இடைச்சாதியின் மகள் குளிரால் நடுங்குகின்ற தோளின்மேலே கட்டின கையளாய்நின்று,

12, 13. சிறு தாம்பு தொடுத்த பசலைக் கன்றின் உறு துயர் அலமரல் நோக்கி—சிறியதாம்பாலே காலிலே கட்டப்பட்ட வருத்தத்தையுடைத்தாகிய கன்றினுடைய முலைபுண்ணுமலுறுகின்ற துயராலே தாய்வருமென்று சுழலுகின்ற தன்மையைப் பார்த்து,

14, 15. கைய கொடுங்கோற் கோவலர் பின்னின்று உய்த்தர—கையிடத்தனவாகிய கொடிய கோலையுடைய இடையர் பின்னேநின்று செலுத்துதலைச் செய்கையினாலே,

16, 17. தாயர் இன்னே வருகுவர் என்போள் நன்மொழி கேட்டனம்—நிரம்பமேய்ந்து, நும்முடைய தாய்மார் இப்பொழுதேவருவரென்று கூறுகின்றோளுடைய நன்றாகிய வார்த்தையாக யாங்கள் கேட்டோம்;

(கு-ரை) தாயரென அஃறிணை உவப்பின்கண் உயர்திணையாகவந்தது.

17. அதனால்—அவள் கூறிய நற்சொல்லின் கருத்தால்,

18, 20. [தெவ்வர், முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து, வருத லலைவர் வாய்வது:] தலைவர் தெவ்வர் முனை கவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து வருதல் வாய்வது—நந்தலைவர் வஞ்சிசூடிச் சென்று பகைவர் மண்ணைக்கொண்டு பின் அவரிடத்தேவாங்கிக்கொண்ட திறையினையுமுடையராய் இங்ஙனம்

தாம் எடுத்துக்கொண்ட வினையை முடித்துவருவாரென்று காங் கருதிய தன்மையிலே அவர் நிற்றலுண்மை,

18. நல்ல—அவர் அங்ஙனம் வினைமுடித்துவருதல், நமக்கு இல்ல றம் நிகழ்தற்குக் காரணமாகலின் நல்லகாரியம்;

20, 21. [நீ நின், பருவர லெவ்வங் களைமா யோயென:] மாயோய் நீ நின் பருவுரல் எவ்வம் களை என—மாமைநிறத்தையுடையோ ளே, நீ நின் மனத்தமோற்றத்தான் உளதான வருத்தத்தைப் போக்கென்றுகூற, அதுகேட்டு,

(கு - பு) மாமைநிறம் - நாருரித்த ஆம்பற்றண்டுபோன்றநிறம்; "நீர் வள ராம்பற் றூம்புடைத்திரள்கா, ஞருரித் தன்ன மதனின்மாமை" என் பது நற்றிணை, ௬.

செலவுக்குறிப்பறிந்து வேறுபட்டதுணர்ந்தமையின், மனத்தமோற்ற மென்றார்.

பெருமுதுபெண்டிர் (௧௧), நல்லோர் (௧௨) போகித் (எ) தூஉய்த் தொழுது (௧௦) விரிச்சி நிற்ப (௧௧) அவர்கேட்ட நன்னர் (௧எ) வாய்ப்புள் (௧அ) ஆய்மகள் (௧௩) கையளாகிக் (௧௪) கன்றின் (௧உ) அலமரனோக்கித் (௧௩) தாயர் இன்னே வருகுவரென்போளுடைய (௧௪) நன்மொழியாக யாங்கள் கேட்டனம்; அதன்கருத்தால் (௧எ), தலைவர் வருதல் வாய்வது (உ௦); நல்லகாரியம் (௧அ); மாயோய் (உ௧), நீ நின் (உ௦) பருவரலெவ்வங் களையென்று கூற (உ௧) அதுகேட்டு நீடுநினைந்து (அஉ) என்க

இங்ஙனம் பொருள்கூறாமல் தலைவியது இரக்கமிகுதிகண்டு பெருமு துபெண்டிர் விரிச்சிகேட்டுவந்து தலைவர்வருவாராதல் வாய்வது; நின் எவ் வங்களையென்று பல்காலும் ஆற்றுவிக்கவும் ஆற்றாளாய்த் துயருழந்து (அ௦) புலம்பொடு (அ௧) தேற்றியும் திருத்தியும் (அஉ) மையல்கொண்டும் உயிர்த் தும் (அ௩) நடுங்கிநெகிழ்ந்து (அ௪) கிடந்தோள் (அ௫) எனப் பொருள் கூறியக்கால் நெய்தற்குரிய இரங்கற்பொருட்டன்றி முல்லைக்குரிய இருத் தற்பொருட்டாகாமையுணர்க. அன்றியும் தலைவன் காலங்குறித்தல்லது பிரியானென்பதூஉம், அவன் குறித்தகாலங்கண்டால் தலைவிக்கு வருத்த மிகுமென்பதூஉம், அது பாலையாமென்பதூஉம், அவ்வாற்றாமைக்கு இரங் கல் நிகழ்ந்தால் நெய்தலாமென்பதூஉம் நூற்கருத்தாதலுணர்க.

22. [காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து:] காட்டவுங் காட் டவுங் கலுழ்சிறந்து காணாள்—தலைவன் புகழும் மானமும் எடு த்துக்காட்டி வற்புறுத்தவும், தோன்றல்சான்ற மாற்றார் பெருமை கூறிக்காட்டி வற்புறுத்தவும் அன்புமிகுதியாற் கலக்கமிக்கு இவை அரசற்குவேண்டுமென்று மனத்திற் கருதாதவள்,

(கு - பு) இவை - பகைமேற்செலவும் போர்முதலியனவும்.

23. பூப் போல் உண் கண் புலம்பு முத்து உறைப்ப—பூப்போலும் மையுண்கண்கள் தாரையாகச்சொரியாது தனித்து வீழ்கின்ற முத்துப்போலுந் துளியைத் துளிப்ப, அதுகண்டு,

24. கான் யாறு தழீஇய அகல் நெடும் புறவின்—காட்டாறுசூழ்ந்த அகன்ற நெடிய காட்டிடத்தே,

25. சேண் நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி—தூரியகிலத்தே நாறுகின்ற பிடவமோடே ஏனைப் பசியதூறுகளையும் வெட்டி,

(கு - பு) பிடவம் - ஒருவகைச்செடி.

26. வேட்டுப் புழை அருப்பம் மாட்டி — பகைப்புலத்துக்குக் காவலாகவிருக்கும் வேட்டுவச்சாதியினுடைய அரண்களையழித்து,

(கு - பு) வேடு - வேடச்சாதி. புழை - சிறியவாயில்கள்.

26, 27. [காட்ட, விடுமுட் புரிசை யேமுற வளைஇ:] காட்ட முள் இடு புரிசை ஏமுற வளைஇ — காட்டின்கண்ணவாகிய முள்ளாலிடு மதிலைக் காவலுறும்படி வளைத்து,

28. [படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி:] புணரி படும் நீரிற் பரந்த பாடி— திரையொலிக்கின்ற கடல்போற்பரந்த பாசறைக்கண்ணே கண்படைபெறாது (கூஎ) என்க.

(கு - பு) 'பரந்த பாசறை' எனவும் பாடம். (உச - உஅ) 'கான்யாறு .....பாடி'-என்பது, தொல். பொரு. சூக-ம் சூத்திரம் நச்சினார்க்கினியருரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

புறவிடத்தே (உச) எருக்கி (உரு) மாட்டி (உசு) வளைஇப் (உஎ) பரந்த பாடியென்க. அன்வயப்படு

29. உவலைக் கூரை ஒழுகிய தெருவில்—தழையாலேவேய்ந்த கூரை ஒழுங்கப்பட்ட தெருவிடத்து,

30, 31. கவலை முற்றம் காவல் நின்ற தேம்படு கவுள சிறுகண்யானை— நாற்சந்தியானமுற்றத்தே காவலாகநின்ற மதம்பாய்கின்ற கதுப்பினையுடையவாகிய சிறியகண்ணையுடைய யானை,

(கு - பு) கதுப்பு - கன்னம்

32, 33, [ஓங்குவிலைக் கரும்பொடு கதிர்மிடைந்தியாத்த, வயல்விளையின் குள குண்ணுது:] ஓங்குவிலைக் கரும்பொடு வயல் விளை கதிர் மிடைந்து யாத்த இன்குளகு உண்ணாது—வளர்கின்ற தன்மையையுடைய கரும்புகளோடே வயலிலே விளைந்த நெற்கதிரிடையே நெருங்கப்பட்டுக் கட்டிப்போகட்ட சாவியையும் இனிய * அதிமதுரத்தழையையுந் தின்னாமல்,

(கு - பு) யாத்தவற்றையும் குளகையுமென்க.

33, 34. நுதல் துடைத்து அயில்நுனை மருப்பில் தம் கையிடைக் கொண்டென — அவற்றாலே தம்நெற்றியைத்துடைத்துக் கூர்மையையுடைய முனைகளையுடைய கொம்பினிடத்தே ஏறட்ட தம் கையிடத்தே கொண்டுநின்றனவாக,

(கு - பு) ஏறட்ட—ஏற்றிக்கொண்ட.

---

* அட்டிமதுரத்தழையென்றும் பிரதிவேறுபாடுண்டு.

35, 36. [கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக், கல்லா விளைஞர் கவளங் கைப்ப:] கல்லா இளைஞர் வடமொழி பயிற்றிக் கவை முட் கருவியிற் கவளங் கைப்ப—வடமொழி அடியிலேகல்லாத இளைஞர் யானைப் பேச்சான வடமொழிகளைக் கற்றுப்பலகாற் சொல்லிக் கவைத்த முள்ளையுடைய பரிக்கோலாலே கவளத் தைத் தின்னும்படி குத்த,

யானைக்குச்செய்யுந் தொழில்களெல்லாம் வேறொரு தொழிலைக்கல் லாத இளைஞரென்றுமாம்.

(கு - பு) பரிக்கோல் - குத்துக்கோல்

37, 40. [கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான், முக்கோ லசைநிலை கடுப்ப நற்போ, ரோடா வல்வில் றூணி நாற்றி, கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கை:]

40. கூடம் குத்திக் கயிறு வாங்கு இருக்கை—கூடமாகக் கால்களை நட்டுக் கயிற்றை வலித்துக்கட்டின இருப்பின்கண்ணே,

என்றது படங்குகளை.

(கு - பு) படங்குகள் - கூடாரங்கள்.

37, 38. கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான் முக்கோல் அசைநிலை கடுப்ப—துகிலைக் காவிக்கல்லைத் தோய்த்துடுத்த விரதங்களை யுடைய முக்கோலந்தணன் அம்முக்கோலிலே அந்த உடை யினை இட்டுவைத்த தன்மையையொக்க,

38, 39. நற்போர் ஓடா வல்வில் தூணி நாற்றி—அறத்தாற்பொருகின் ற போரிற்கு ஓடாமைக்குக் காரணமான வலியவில்லைச் சேர ஊன்றி அதிலே தூணிகளைத் தூக்கி,

41. பூந்தலைக் குந்தம் குத்தி—பூசதொழிலைத் தலையிலேயுடைய எரி கோல்களையுமூன்றி,

பூந்தலை - விகாரம்.

41. கிடுகு நிரைத்து—கிடுகுகளையும் நிரையக் குத்தி,

(கு - பு) கிடுகு - சட்டம்.

42. வாங்கு வில் அரணம் அரணமாக—இங்ஙனஞ்சூழும் விற்பட யாகிய அரணே தங்களுக்கு அரணாக, இதற்குள்ளேவிட்ட,

கயிறுவாங்கிருக்கைக்கண்ணே (சம) நாற்றிக் (ஙக) குத்தி நிரைத்து (சக) வாங்குவில்லரணமென்க (சஉ).

43. வேறு பல் பெரும்படை நாப்பண்—மொழி வேறுபட்ட பலவா கிய பெரிய படைக்குநடுவே,

(கு - பு) வேறு வேறுபாஷைகள் பேசப்படும் நாடுகள் பலவற்றி லிருந்து வந்தசேனை.

43, 44. [வேறோர், நெடுங்காழ்க் கண்டங் கோலியக நேர்பு:]

43, 44. வேறோர் அகம் நேர்பு—வேறோரிடத்தை அரசனுக்குக் கோயி லாக எல்லாரு முடம்பட்டு,

44. நெடுங்காழ்க் கண்டம் கோலி—நெடிய குத்துக்கோலுடனே பண்ணின பலநிறத்தாற் கூறுபட்ட மதிட்டிரையைவளைத்து, கண்டம் - ஆகுபெயர்.

45. குறுந்தொடி முன்கைக் கூந்தல் அம் சிறுபுறத்து. மங்கையர் (சள)—குறியதொடியையுடைய முன்கையினையும் கூந்தலசைந்து கிடக்கின்ற அழகினையுடைய சிறிய முதுகினையுமுடைய மங்கையர்,

46, 47. இரவு பகற்செய்யும் திண்பிடி ஒள் வாள் விரவு வரிக் கச்சிற் பூண்ட மங்கையர் — இராப்பொழுதைப் பகற்பொழுதாக்குந் திண்ணிய ஆசினையுடைய ஒள்ளியவாளை விரவினநிறத்தினையுடைய கச்சினாலேபூண்ட மங்கையர்,

(கு - பு) ஆசு - வாளின் உறை.

48, 49. நெய் உமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக் கை அமை விளக்கம் நந்துதொறும் மாட்ட—நெய்யைக்காலுகின்ற திரிக்குழாயையுடைய சிற்றூட்கள் நெடிய திரியை எங்குங்கொளுத்தி ஒழுங்காயமைந்த விளக்குக்கள் அவியுந்தோறும் தங்கையிற்பந்ததைக்கொளுத்த,

50. நெடுநா வொண்மணி நிழற்றிய நடுநாள் — நெடிய நாக்கினையுடைய ஒள்ளியமணி எறிந்துவிட்ட நடுயாமத்தும், கோயில் பணிமடங்கினால் மணியெறிந்துவிடுதல் இயலவு. இனி யானை குதிரைமுதலியன துயில்கோடலின், அவற்றின் மணியோசை அடங்கிய நடுநாளென்றுமாம்.

(கு - பு) வீடுகளில் வேலைகளோய்ந்தபின்பு மணியை அடித்துவிடும் வழக்கமுண்டென்பது "நெடுநா வொண்மணி கடிமனை யிரட்ட", "யாமங் கொள்பவர் நெடுநா வொண்மணி, யொன்றெறி பாணியி னிரட்டும்" என்னும் நற்றிணைச்செய்யுட்களாலும் வலியுறுத்தப்படுகின்றது.

51, 52. அதிரல்பூத்த ஆடு கொடிப் படாஅர் சிதர் வரல் அசை வளிக்கு அசைவந்தாங்கு—புனலிபூத்த அசைகின்ற கொடியினையுடைய சிறுதூறுகள் துவலையோடே வருதலையுடைய அசைந்த காற்றிற்கு அசைந்தாற்போல,

சிதர் - மெத்தெனவுமாம்.

(கு - பு) புனலி - ஒருவகைப்பூஞ்செடி; பழைய நூல்களிற் காணப்படுகின்றது.

53, 54. துகில் முடித்துப் போர்த்த தூங்கல் ஓங்கு நடைப் பெரு மூதாளர் ஏமம் குழ—மயிர்க்கட்டுக்கட்டிச் சட்டையிட்ட அனந்தரினையும், பெரிய ஒழுக்கத்தினையுமுடைய மெய்காப்பாளர் காவலாகச் சூழ்ந்துதிரிய,

(கு - பு) மயிர்க்கட்டு - தலைக்கட்டு (தலைக்குட்டை). அனந்தர் - கள்ளின் செருக்கு. மெய்காப்பாளர் - அரசன் சரீரத்தைப் பாதுகாப்பவர்கள்.

55, 56. [பொழுதளந் தறியும் பொய்யா மாக்க, டொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி:]

55, 56. மாக்கள் பொழுது அளந்தறியும் பொய்யாக் காண்கையர்—அறிவில்லாதோருடைய வாழ்நாளை இத்துணையென்று அளந்தறியும் பொய்யாத காட்சியையுடையார்,

(கு-பு) மாக்கள் - விதி விலக்கு அறியாதவர்கள்; "கையறியா மாக்கள்" என்பது நாலடியார்.

56. தொழுது தோன்ற வாழ்த்தி—அரசனைவணங்கி விளங்க வாழ்த்தி,

57. எறி நீர் வையகம் வெலீஇய செல்வோய்— திரையெறிகின்ற கடல்சூழ்ந்த உலகத்தே பகைவரை வெல்லுதற்குச் செல்கின்றவனே,

57, 58 நின் குறுநீர்க் கன்னல் இனைத்து என்று இசைப்ப—கிடாரத்து நீரிலேகாண்கின்ற நினது நாழிகைவட்டிலிற் சென்றநாழிகை இத்துணையென்று சொல்லுகையினாலே,

(கு-பு) குறுநீரென்றது நாழிகைவட்டிலை; கன்னல் - நாழிகை.

59. [மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை:]

59. மத்திகை வளைஇய உடை—புரவியை அடிக்கின்ற சம்மட்டி வளைந்து கிடக்கின்ற உடை,

59. மறிந்து வீங்கு செறிவு உடை—அச்சம்மட்டி மறையும்படி வடிம்பு தாழ்ந்து பெருக்குஞ் செறிதலையுடைய புடைவையுடையினையும்,

(கு-பு) ஆண் உடையையும் புடைவையென்பது பண்டைக்கால வழக்கு.

60. மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து—சட்டையிட்ட அச்சம்வருந் தோற்றரவினையும்,

(கு-பு) தோற்றரவு - தோன்றுதல்.

61. வலி புணர் யாக்கை — இயல்பான வலிகூடின மெய்யினையுமுடைய,

61. வன்கண் யவனர்—தறுகண்மையினையுடைய சோனகர்,

62. புலித்தொடர் விட்ட புனை மாண் நல்லில்—புலிச்சங்கிலிவிடப்பட்ட கைசெய்தமாட்சிமைப்பட்ட நன்றாகிய இல்லிலே,

63, 64. திரு மணி விளக்கம் காட்டித் திண்ஞாண் எழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுள்—அழகினையுடைய மாணிக்கமாகிய விளக்கை எரியவைத்துத் திண்ணிய கயிற்றிற்றிரையையவிழ்த்த புறவறைக்குள்ளறையிற் படுக்கைக்கண்ணேசென்று,

65, 66. [உடம்பி னுரைக்கு முரையா நாவிற், படம்புகு மிலேச்சருழைய ராக:] உரையா நாவின் உடம்பின் உரைக்கும் படம்

புகும் மிலேச்சர் உழையராக—வார்த்தை சொல்லாத நாவினை யுடைய கையாலும் முகத்தாலும் வார்த்தைசொல்லுஞ் சட்டையிடுஞ் சரவாசிகள் பள்ளிகொள்ளுமிடத்தைச் சூழ்ந்துதிரிய, உயோநாவென்றார், ஊமைகளென்றற்கு,

(கு - பு) சரவாசிகள் - சரித்துக்கொண்டே வசிப்பவர்கள்; இப்பெயரை அசாரவாசிகளென்றுங் கூறுவர்; ஊமைகளைப் படுக்கையறையின் வாயிலிற்காவலாகவைத்தல் மரபு.

67. மண்டு அமர் நசையொடு கண்படை பெறாஅது—பகைவர் மனமறியாமல் மிக்குச்செல்கின்ற போரை நச்சுதலாலே கண்ணுறக்கம்பெறாமல்,

(கு - பு) நச்சுதல் - விரும்புதல்.

68, 69. எடுத்து எறி எஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து பிடிக்கணம் மறந்த வேழம் உள்ளியும் (எஉ—ஓச்சிவெட்டுகின்ற வாளமுந்துகையினாலே புண்மிக்குப் பிடித்திரளைமறந்த வேழத்தையுள்ளியும்,

(கு - பு) ஓச்சி - உயர்த்தி. பிடி - பெண்யானை. வேழம் - இங்கே ஆண்யானை.

69, 70. [வேழத்துப், பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமிய:] வேழத்துப் பரூஉக்கை பாம்பு பதைப்பன்ன துமிய—யானையினுடைய பரிய கைகள் பாம்பினது பதைக்கின்ற தன்மையையொத்த பதைப்பினையுடையவாக அற்றுவிழும்படி,

71, 72. தேம் பாய் கண்ணி நல்வலந் திருத்திச் சோறு வாய்த்து ஒழிந்தோர் உள்ளியும்—தேன்பரக்கும்வஞ்சிமாலைக்கு நன்றாகிய வெற்றியை யுண்டாக்கிச் செஞ்சோற்றுக் கடனிறுத்துப் பட்டவீரரை நினைத்தும்,

(கு - பு) செஞ்சோற்றுக்கடன் - செவ்விய சோற்றை அளித்தவர்களுக்குச் செய்யவேண்டிய உரிமை; அஃதாவது உண்டவர்கள் தம்மைப் பாதுகாத்தோர் பொருட்டு உயிர்விடுதல்; "செஞ்சோற்றுக் கடனின்றே கழியேனாகில்" என்பதனாலுமுணர்க (பாரதம்).

72, 74. தோல் துமிபு வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்து உண்ணாது உயங்கும் மா சிந்தித்தும்—பக்கரைகளை யறுத்துக் கூரிய முனையினையுடைய அம்புகள் வந்து அழுந்துகையினாலே செவிசாய்த்துப் புல்லுண்ணாதே வருந்துங் குதிரைகளை நினைத்தும்,

(கு - பு) பக்கரை - தோலாற்செய்த கலனைமுதலியவை.

75, 76. [ஒருகை பள்ளி யொற்றி யொருகை, முடியொடு கடகஞ் சேர்த்தி:] ஒருகை பள்ளி ஒற்றி ஒருகைக் கடகம் முடியொடு சேர்த்தி—ஒரு கையைப் படுக்கையின்மேலேவைத்து ஒருகையிற் கடகத்தை முடியோடேசேரவைத்து,

என்றது - கையிலே தலையைவைத்தென்றாயிற்று.

76. நெடிது நினைந்து—இப்படைநொந்தவளவுக்கு நாளை எவ்வாறு பொருமென்று நெடிதாகநினைந்து,

77. பகைவர்ச் சுட்டிய படை கொள் நோன் விரல்—பகைவர்மேல் கருதிவைத்த வாளைப்பிடித்த வலியினையுடைய கையாலே வெட்டிவென்று (அசு) என்க.

78. நகை தாழ் கண்ணி நல்வலம் திருத்தி—தனக்கு எக்காலமும் விளக்கந்தங்கும்வஞ்சியைநன்றாகிய வெற்றிநிலைபெறத்திருத்தி,

79. அரசு இருந்து பனிக்கும் பாசறை—பகையரசிருந்து நடுங்குதற்குக்காரணமான பாசறை,

79. பனிக்கும் பாசறை—* நோய் தீருமருந்துபோனின்றது.

(கு - பு) நோய்தீருமருந்து - நோய்தீர்தற்குக்காரணமான மருந்து.

79 முரசு முழங்கு பாசறை—வெற்றிக்களிப்புத்தோன்ற முரசுமுழங்கும் பாசறை,

80, 84. [இன்றுயில் வதியுநற் காணு யெருழந்து, நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு, நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்தியு, மையல் கொண்டு மொய்யெனவுயிர்த்து, மேவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து:]

80 வதியுநன் இன்றுயில் காணுள்—தன்னிடத்தேதங்குகின்றவனை இனியதுயில் கொள்ளுதலைக் காணுளாய்,

81. நெஞ்சு ஆற்றுப்படுத்த புலம்பொடு—அவன் தன்னெஞ்சந் தான் போகின்றவழியிற் செலுத்துதலால் தனக்குண்டான தனிமையாலே,

இது † "நிகழ்ந்தது நினைத்தற் கேதுவு மாகும்" என்பதாம்.

81. நிறைதபு புலம்பு—தனதுநிறைகெடுத்ததனிமை,

82 நீடு நினைந்து—இங்ஙனம் பிரிந்தாலன்றி இவ்வரசியல் நிகழாதென்று நினைத்து,

82. ஓடு வளை திருத்தியும்—கழலுகின்றவளையைக் கழலாமற் செறித்தும்,

83. மையல்கொண்டும்—மயக்கங்கொண்டும்,

83. ஒய்யென உயிர்த்தும்—விரைய நெட்டுயிர்ப்புக்கொண்டும்,

84. ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி இழை நெகிழ்ந்து — அம்பு தைத்த

---

* கலித்தொகை, இரண்டாவதுகுறிஞ்சிக்கலி, உங. "அலர்முலையாயிழை நல்லாய் கதுமெனப் - பேரம ருண்கணென் றோழி யுறீஇய - வாரஞ ரெவ்வ முயிர் வாங்கு - மற்றிந்நோய் தீரு மருந்தருளா யெண்டொடீஇ."

† தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், சக.

மயில்போல நடுங்கி, அணிகலங்கள் நெகிழ்ந்து கண் புலம்புமுத் துறைப்ப (உரு) எனக் கூட்டுக.

80, 82. துயருழந்து தேற்றியும்—அதனைக்கண்டு தானும் வருந்தமுற்று இவள் ஆற்றியிராளென்று துணிந்தும்,

85. பாவை விளக்கிற் பருஉச்சுடர். அழல — பொறபாவை ஏந்தி நின்ற தகளியிலே பரியவிளக்கு நின்றெரிய,

விளக்கு - ஆகுபெயர்.

(கு - பு) பாவை விளக்கு - பிரதிமைத்தீபம். தகளி - அகல்.

86. இடம் சிறந்து உயரிய எழுநிலை மாடத்து — தனக்குள்ள இடமெல்லாம் பொன்னாலும் மணியாலும் சிறப்புப்பெற்று உயர்ந்த எழுநிலையினை யுடைய மாடத்திடத்து,

87. மூடங்கிறைச் சொரிதரும் மாத்திரள் அருவி— * மூட்டுவாய் களினின்றுஞ் சொரிதலைச்செய்யும் பெருமையையுடைய திரண்ட அருவிகளினுடைய,

(கு - பு) மூட்டுவாயென்றது கூடுவாய் மூலையை.

88. இன் பல் இமிழ் இசை ஓர்ப்பனள் கிடந்தோள்—இனிய பலவாகிய முழங்குகின்ற ஓசைக்கண்ணே தலைவன் தான்கூறிய பருவம் பொய்யாமல் வருவனென்னுங் கருத்தினளாகலின் அவன் வரவினையே கருதிக்கிடந்தோளுடைய,

89. அஞ்செவி நிறைய ஆலின—அகஞ்செவி நிரம்பும்படி ஆரவாரித்தன;

89, 91. [வென்றுபிறர், வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு, விசயம்:]

89. வென்று—வெட்டிவென்று,

89, 91. பிறர் வேண்டு புலம் கவர்ந்த விசயம்—பகையரசர் எக்காலமும் விரும்பும் நிலங்களைக் கைக்கொண்ட வெற்றியாலே,

90. ஈண்டு பெருந்தானையொடு—திரளுகின்ற பெரியபடையோடே, அரசன் வினைமுடிந்தகாலத்தே விரைந்துபோந்தானாகலின்; அதுகேட்டுவருகின்ற படையென்பதுதோன்ற ஈண்டுபெருந்தானை யென்றார்.

91. வெல்கொடி உயரி—எக்காலமும் வென்றெடுக்கின்ற கொடியை எடுத்து,

91, 92. வலநேர்பு வயிரும் வளையும் ஆர்ப்ப—வெற்றிதோன்றிக் கொம்பு ஞ்சங்குமுழங்க,

(கு— பு) ஏர்பு—எழுந்து, வலன் நேர்பு எனப் பிரித்தலுமாம்.

92, 93. அயிர செறி இலைக் காயா அஞ்சனம் மலர—துண்மணலிடத்த

* கூடுவாயென்றும் பிரதிவேறுபாடுண்டு.

னவாகிய நெருங்கின இலையினையுடைய காயா அஞ்சனம்போல அவிழ,

(கு—பு) காயா—ஒருவகை மரம். அஞ்சனம்—மை.

94. முறி இணர்க் கொன்றை நன்பொன் கால—தளிரினையுங் கொத்தினையுமுடைய கொன்றை நன்றாகிய பொன்னைச்சொரிய,

95. கோடற்குவிமுகை அங்கை அவிழ—கோடலினது குவிந்தமுகைகள் அகங்கைபோல விரிய,

(கு—பு) கோடல்—வெண்காந்தள். முகை—அரும்பு.

96. தோடு ஆர் தோன்றி குருதி பூப்ப—திரட்சிநிறைந்த தோன்றி உதிரம்போலப் பூப்ப,

(கு - பு) தோன்றி - செங்காந்தள்.

97. கானம் நந்திய செந்நிலப்பெருவழி—காடுதழைத்த சிவந்தநிலத்திற் பெருவழியிலே,

98, 100. [வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற், றிரிமருப் பிரலையொடு மடமா னுகள, வெதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்:]

98. வானம் வாய்த்த வரகு—மழைவேண்டப் பெய்தவரகு,

100, 98. எதிர் செல் வெண்மழை பொழியும் திங்களில் வாங்கு கதிர் வரகின்—எதிர்காலத்துக்குப் பெய்யச்செல்கின்ற வெள்ளியமழை சிறுதுவலையைப்பொழியும் முன்பனிதொடங்குந் திங்களிலே வளைகின்ற கதிரையுடைய வரகிடத்தே,

99. திரி மருப்பு இரலையொடு மடமான் உகள—முறுக்குண்டகொம்பினையுடைய புல்வாய்க்கலையோடே மடப்பத்தையுடைய மான் துள்ள,

(கு - பு) மடப்பம் - அறியாமை, இளமை. மான் பெண்மான்.

மழையால் தண்ணீரும் புல்லும் நிறையப்பெற்றுப் புணர்ந்துதிரியுமென்ற கருப்பொருளால், அவற்றைக்கண்ட அரசனுக்கு வேட்கைமிகுதி கூறிற்று.

மலரக் (கூக) கால (கூச) அவிழப் (கூரு) பூப்ப (கூசு) உகளக் (கூகூ) கானநந்தியபெருவழி (கூஎ) என்க.

இவை எல்லாம் வேட்கைவிளைதற்குக் காரணமாயின.

101. முதிர் காய் வள்ளியங்காடு பிறக்கு ஒழிய—தன்பருவம் வந்தால் முதிருங்காயையுடைய வள்ளியங்காடு பின்னாக,

(கு - பு) வள்ளி - வள்ளிக்கிழங்கு.

102. துனை பரி துரக்குஞ் செலவினர்—விரைந்துசெல்லும் பரியை அதனாலமையாமற் கடிதாகச்செலுத்துஞ் செலவினையுடையராய் வந்தவருடைய,

என்றது:—* "வினைவயிற் பிரிந்தோன் மீண்டுவரு காலை, யிடைச் சுர மருங்கிற்றவிர்த வில்லை, யுள்ளம் போல வுற்றுழி யுதவும், புள்ளியற் கலிமா வுடைமை யான." என்பது தோன்றக் கூறிற்று.

(கு - பு) 'வினைவயிற் பிரிந்தோன்' என்பதன்பொருள்: யாதானும் ஓர்செய்வினையிடத்துப் பிரிந்த தலைவன் அதனைமுடித்து மீண்டுவருங்கால த்து, எவ்வளவுகாததூரம் இடையிட்டதாக இருந்தாலும் அவ்விடையின் கணுண்டாகிய அருவழியிடத்துத் தங்கி வருதலில்லை; உள்ளம் நெடுந்தூர மான இடத்தை ஒருக்ஷணத்திற் செல்லுமாறுபோலத் தலைவன்மனம் சென் றுற்றவிடத்தே ஒருக்ஷணத்திற்சென்று உதவிசெய்யும் பறவைகளைப்போல நிலத்தைத்தீண்டாத செல்லுதலையுடைய செருக்குற்ற குதிரையையுடை யானுதலால். எ - று, உடைமையால் தவிர்தலில்லையென்க.

103. வினைவிளங்கு நெடுந்தேர்பூண்டமாவே—தான் எடுத்துக்கொ ண்ட வினை எக்காலமும் விளங்கும் நெடிதாகிய தேரைப்பூண்ட குதிரை.

தலைவி தன்னிடத்தே வதிகின்றவனை இன்றுயிலைக்காணாளாய் (அ0) நெஞ்சாற்றிப்படுத்த புலம்பா[illegible]) ஓடவளை திருத்தியும் (அஉ) மையல் கொண்டுக் உயிர்த்தும் (அங) நடுங்கிநெகிழ்ந்து (அச) பூப்போலுண்கண் புலம்புமுத்துறைப்ப (உங) அதுகண்டுதுய்ருழந்து (அ0) தேற்றியும் (அஉ) வற்புறுத்திப் பிரிதல்வேண்டுமெனக் கருதிக் காட்டவுங் காட்டவுங்காணாத [illegible] (அஉ) பெருமுதுபெண்டிர் (கக) எவ்வங்களையெனக்கூற (உக) அது கேட்டு நீடுநினைந்து (அஉ) பெரும்பெயல்பொழிந்த சிறுபுன்மாலையில் (சு) இட்டசுடர் அழலாநிற்க (அரு) இமிழிசை ஓப்பனள் கிடந்தோருடைய (அஅ) அஞ்செவிநிறையப் (அக), பரந்தபாடியிலே(உஅ) அரசிருந்து (எசு) ஒருகைபள்ளியொற்றி ஒருகை (எரு) முடியொடுசேர்த்தி (எசு)வேழத்தை (சுக) யுள்ளியும் (எஉ) மாவைச்சிந்தித்தும் (எச) ஒழிந்தோரை உள்ளியும் (எஉ) நினைந்து (எசு) நடுங்குதற்குக்காரணமான பாசறையிற் (எகூ) பெரும் படைநாப்பண் வேறோர் (சரு) அகம் நேர்பு கண்டங்கோலி (சச) யவனர் (சுக) புலித்தொடர்விட்ட நல்லில்லிலே (சுஉ) பொழுதளந்தறியுங் (ருரு) காண்கையர் (ருசு) கன்னல் இனைத்தென்றிசைக்கையினாலே (ருஅ) மங் கையர் (சஎ) திருமணிவிளக்கங்காட்டி (சுங) எழினிவாங்கிய பள்ளியிலே சென்று (சுச) இளையர் கவளங்கைப்பச் (ருசு) சுரையர் (சஅ) மாட்டப் (சசு) பெருமூதாளர் ஏமஞ்சூழ (ருச) மிலேச்சருழையராக (சுசு) வெண் மணிகிழற்றிய நடுநாளினும் (ரு0) மண்டமர் நசையாற் கண்படைபெறு திருந்து (சுஎ) மற்றைநாட் படைகொணேன்விரலாலே (எஎ) வென்று (அசு) கண்ணிவலந்திருத்திப் (எஅ) பிறர்வேண்டு புலங்கவிந்த (கo) விச

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ருங.

யத்தாலே வெல்கொடியுயரிக் (கூக) காடுபிறக்கொழியப் (கo௧) பெருவழி யிலே (௧௭) வயிரும் வளையுமார்ப்ப (௧௨) ஈண்டு பெருந்தானையோடே (௧o) துனைபரிதுரக்குஞ் செலவினையுடையராய் வந்தவருடைய (௧o௨) தேர்பூண்டமா (௧o௩) ஆவின (அ௧) வென வினைமுடிக்க.

* "செல்விடை யழுங்கல் செல்லாமை யன்றே, வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்" என்பதனால் வற்புறுத்திப் பிரிதல்வேண்டுமென்றுணர்க.

தொல்காப்பியனார் கருத்திற்கேற்ப நப்பூதனார்செய்யுள் செய்தாரென்றுணர்க. இவ்வாறன்றி ஏனையோர் கூறும்பொருள்கள் இலக்கணத்தோடு பொருந்தாமையுணர்க.

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார்மகனார் நப்பூதனார் பாடிய முல்லைப்பாட்டிற்கு மதுரைஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

வெண்பா.

௧. வண்டடை கண்ணி வளர்சசி வாணெடுங்கண்,
சென்றடைந்த நோக்க மினிப்பெறுவ—தென்றுகொல்
கன்றெடுத் தோச்சிக் கனிவிளவின் காயுகுத்துக்,
குன்றெடுத்து நின்ற நிலை.

௨. புனையும் பொலமபடைப் பொங்குளைமான் றிண்டேர்
துனையுந் துனைபடைத் துன்னார் - முனையு
ளடன்முகந்த தானை யலர்வரா முன்னங்
கடன்முகந்து வந்தன்று கார்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௪௪.

THE UNIVERSITY OF MADRAS
U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR :: MADRAS

[illegible]

[illegible] கிறது. ஏனெனில், புறப்பாடே [illegible]
[illegible], அகநானூறு எனும் [illegible]
[illegible] பெயர் வரக்கூறும், [illegible]

மெய்ப்பாடும் 9 புறப்பொருட்டாகவும் 7 அகப்பொருட்டாகி
[illegible]கிறதாகும் 1. [illegible] & [illegible]
[illegible]வேன், அகத்துப்பொருட்டு, புறப்பொருட்டு என்று
[illegible]வகுப்பட்டது.

[illegible]

[illegible]